Stadt Zürich
Schulamt

Fachstelle Psychomotorik
Rämistrasse 39
8001 Zürich

# உளம்-செயல் சார்புடைய சிகிச்சை

ஜூரிக் நகரம் அளிக்கும் சிறப்புக் கல்விக்கான ஒரு வாய்ப்பு

**உளம்-செயல் சார்புடைய சிகிச்சை என்றால் என்ன?**

உடல் அசைவுகளில் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு இச்சிகிச்சை ஆதரவுடன் கூடிய உதவி அளிக்கிறது. உளம்-செயல் சார்புடைய இச்சிகிச்சையின் அடிப்படையே குழந்தைகளின் வளர்ச்சி என்பது அவர்களது **அசைவு**, **அனுபவித்தல்**, **எண்ணுதல்**, **உணர்தல்** மற்றும் **செயலாற்றுதல்** ஆகியவற்றின் ஒருங்கிணைப்பு என்னும் புரிதல் ஆகும். ஒரு குழந்தை விளையாடும்போது தனது அசைவுகள், உள்ளுணர்ச்சிகள் மற்றும் சிந்தனைகளை ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்திக் கொள்கிறது. உளம்-செயல் சார்பு" என்னும் கருத்துப் படிவம் உடல் வளர்ச்சியையும் அறிவு வளர்ச்சியையும் இணைப்பதை அழுத்தமாக அறிவுறுத்துகிறது.
ஒவ்வொரு மனிதரும் தனது அசைவுகளில் தனது முழுமையான ஆளுமையை உட்செலுத்துகிறார்.

**எம்மாதிரியான குழந்தைகள் உளம்-செயல் சார்புடைய சிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்றனர்?**

எல்லா குழந்தைகளும் ஒன்றுபோல இருப்பதில்லை. குழந்தைகளுக்கிடையே அவர்களது அசைவுகளின் வளர்ச்சியில் பெரும் வேறுபாடுகள் இருக்கும். ஒவ்வொரு குழந்தைக்கும் அதற்கான வலிமைகள் மற்றும் பலவீனங்கள் உண்டு. அவர்களது ஈடுபாடுகள் மற்றும் திறமைகளும் பிரத்தியேகமாகவே இருக்கும்.
சில குழந்தைகளிடம் அவர்களது அசைவுகள், புரிதல்கள் மற்றும் நடத்தையில் உள்ள தனித்தன்மைகள் வெளிப்படையாகத் தெரியும். அவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

- உடல் அசைவின் வளர்ச்சியில் தாமதம்
- திறமை நயமின்மை
- மிகைச் செயற்பாடு மற்றும் மிகையாக உணர்ச்சிவசப்படுதல்
- தடைப்பட்ட இயக்கங்கள்

எழுத்து வேலை வளர்ச்சியில் வெளிப்படையாகத் தெரியும் குறைபாடுகள்
உடல் அசைவுகளில் தெரியும் குறைபாடுகள் பெரும்பாலும் சமூகவுணர்வு, உணர்ச்சிகளின் தளம், புலனறிவு ஆகியவற்றின் வளர்ச்சியில் ஏற்படும் பிரச்சினைகளுடன் சேர்ந்திருக்கும். அவை கீழ்க்கண்ட முறைகளில் வெளிப்படலாம்:

- தோல்விகளைக் கையாளுவதில் பிரச்சினைகள் ( நிலைகுலைவு சகிப்புத் தன்மை குறைந்த அளவில் இருத்தல்)
- மற்றக் குழந்தைகளுடன் பழகுவதில் பிரச்சினைகள்
- ஆக்கிரமிப்புத் தன்மையுடன் நடத்தல்
- சிறு குழந்தை போன்று நடந்துக் கொள்ளல்
- தன்னம்பிக்கைக் குறைவு
- ஒரு விஷயத்தில் கவனம் செலுத்துவதில் கட்டுப்பாட்டுக்குட்பட்டு நடப்பதில் குறைபாடு
- கற்பதில் பிரச்சினைகள் மற்றும் சில பகுதி வேலைகளில் திறமைக் குறைப்பாடு

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகாளால் தமது வளர்ச்சியில் பாதிப்படைந்த குழந்தைகளுக்கு இந்த உளம்-செயல் சார்புடைய சிகிச்சையானது அவரவர் தேவைக்கேற்ப நிலைநிறுத்தப்பட்ட உதவியளிக்கிறது.

**உளம்-செயல் சார்புடைய இச்சிகிச்சையில் குழந்தைகளுக்கு எம்மாதிரி அனுபவங்கள் மற்றும் பயிற்சி அளிக்கப்படுகின்றன?**

இதில் கிடைக்கப் பெறும் பலதரப்பட்ட விளையாட்டு மற்றும் பயிற்சிக் கருவிகள் குழந்தைக்கு ஆவலுடன் கற்கும் தளத்தை அளிக்கின்றன. இந்த உளம்-செயல் சார்புடைய சிகிச்சையில் குழந்தை தனது வலிமைகளையும் தனிப்பட்ட ஈடுபாடுகளையும் விளையாட்டு மற்றும் செயல்பாடு ஆகிய வடிவங்களில் மாற்றியமைக்கிறது.
குழந்தை தானாகவே சுயதீர்மானம் மற்றும் உந்துதலில் கற்றுக் கொள்கிறது. அது பெறும் வெற்றிகள் அதன் தன்னம்பிக்கை மற்றும் கற்பதில் ஊக்கம் கொள்தல் ஆகியவற்றை மேலும் பலப்படுத்துகின்றன. தனது சொந்த உயிர்ப்புற்ற அசைவுகள் மற்றும் பிறரது அசைவுகளைப் பார்த்துப் பெறும் அனுபவங்கள், தானே முயன்று **ஆராய்தல்** மற்றும் **சோதித்தல்** ஆகியவை முன்னேற்றத்தை ஊக்கப்படுத்தும் முக்கிய அம்சங்களாகும்.
**பார்த்தல், கேட்டல், தொடுதல்** மற்றும் உடல் மற்றும் அசைவுகளை உணர்தல் மேலும் சமநிலையில் இருக்கும் உணர்வு ஆகியவை அசைவுடன் நெருங்கிய தொடர்புடையவை. அவற்றுக்கு இச்சிகிச்சையில் ஒரு முக்கிய இடம் உண்டு.
தனது உடல் தோரணை, முகபாவம் மற்றும் சைகைகள் ஆகியவற்றின் மூலம் ஒரு குழந்தை தனது **உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறது**.
**விளையாட்டு** என்பது தன்முனைவோடும் ஒத்திசைவோடும் தினசரி வாழ்க்கையில் செயல்படுவதின் ஒரு முக்கிய அடிப்படையாகும்.
உளம்-செயல் சார்பு முன்னேற்றத்திலும் அது ஒரு முக்கிய அங்கமாகும்.
இச்சிகிச்சை அளிப்பவர் ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் தேவைகளுக்கேற்ப ஊக்கம் அளிக்கும் விஷயங்களைத் தருகிறார். அவற்றின் மூலம் குழந்தையால் தனது அசைவுகளை **பயின்று மேம்படுத்த** இயலும். இவை மேம்போக்கான மற்றும் நுண்ணிய இயக்கத் திறமைகள், எழுத்துவேலை ஆகிய தளங்களில் நிகழ்கின்றன.

எழுத்தறிவு மேம்பாட்டு சிகிச்சையால் குழந்தையின் கையெழுத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு அதன் எழுத்துத் திறமை மேம்படுத்தப்படுகிறது. இதில் கவனிக்கப்படும் மற்ற விஷயங்கள்: இடது கைப்பழக்கம் அல்லது பிரச்சினைக்குரிய வகையில் கைப்பழக்கம் ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினைகள் சம்பந்தமாக வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை கூறுதல்.

**குறிக்கோள்கள்:** உளம்-செயல் சார்புடைய இச்சிகிச்சை குழந்தைகளுக்கு அவர்தம் அசைவுகள் மற்றும் உணர்தல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் மேம்பாடு அளித்து அவர்கள் சமூகத்தில் கூடிவாழத் தேவையான திறமைகளை வளர்த்துக் கொள்ள ஆதரவு அளிக்கிறது.
குழந்தைகளால் தமது பிரச்சினைகளுக்கெதிராக புதிய யுக்திகளை வளர்த்து, தமக்குரிய தீர்வுக்கான வழிகளை தாமே தீர்மானித்துக் கொள்ள முடிகிறது. அவர்களது தன்னம்பிக்கை வலிமை பெறுகிறது. அவர்களால் தினசரி வாழ்க்கையில் இன்னும் மேம்பட்ட முறையில் தங்களை சுதாரித்துக் கொள்ள முடிகிறது.

## 2. உளம்-செயல் சார்புடை சிகிச்சையளிப்பவர் எந்தெந்த விஷயங்களில் செயலாற்றுகிறார்?

**விளக்கங்கள்:** உளம்-செயல் சார்புடை சிகிச்சையளிப்பவர் முதலில் தன்னிடம் அனுப்பப்படும் குழந்தையின் மேம்போக்கான மற்றும் நுண்ணிய இயக்கத் திறமைகள், எழுத்துத் திறமைகள் ஆகியவற்றில் அப்போதைய நிலை, அதன் நடத்தை ஆகியவற்றைக் கண்டறிகிறார். அக்குழந்தை சம்பந்தமான தனிப்பட்ட விளக்கங்களைப் பெறும் வேலையில் ஈடுபடுகிறார். மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்ட மற்றும் தன்னிச்சையான விளையாட்டு மற்றும் அசைவுகளுக்கான நிகழ்வுகளில் குழந்தையைப் பார்வையிடுகிறார். மேலும் குழந்தைக்கான முக்கியப் பொறுப்பாளர்களுடன் ( அதன் பெற்றோர், ஆசிரியர்கள்) மேலதிகத் தகவல் பெறும் நோக்கத்தில் பேசுகிறார்.
குழந்தையின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுக்கு தான் குழந்தை சம்பந்தமாக அவதானித்ததைக் கூறுகிறார். மேம்பாட்டுக்கான குறிக்கோள்கள் பொதுவாக விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றன.

**சிகிச்சை:** மேலே பெறப்பட்ட விளக்கங்களின் அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர்களுடன் கூட்டாகச் செயல்பட்டு சிகிச்சை அளிப்பவர் அக்குறிப்பிட்டக் குழந்தைக்கு அளிக்கவிருக்கும் சிகிச்சையின் நோக்கங்களை நிலையுறுத்துகிறார். இந்த நோக்கங்களை மனதில் வைத்து சிகிச்சை அவர் சிகிச்சையளிக்கிறார். இந்த சிகிச்சைக்கு குழந்தையின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் தத்தம் ஆதரவை அளிக்கும் சாத்தியக்கூறுகளையும் அவர்களுடன் சேர்ந்து ஆராய்கிறார். மேம்பாட்டுக்கான இலக்குகள் ஆறுமாதங்களுக்கு ஒருமுறை சம்பந்தப்பட்ட எல்லோருடனும் பேசி ஆராயப்படுகின்றன.

**சிறப்பு ஆலோசனை, தடுப்பு நடவடிக்கைகள்:** சிகிச்சையளிப்பவர் இந்த விஷயத்தில் தனது சிறப்பறிவை தனிப்பட்ட ஆசிரியர்களுக்கோ அல்லது முழுமையான பள்ளிக்கோ அளிக்கலாம். ஆசிரியர்களுடன் சேர்ந்து செயலாற்றலாம் அல்லது மேம்பாட்டு செயல் நடவடிக்கைகளை முழு வகுப்புகளுக்கோ அல்லது குழந்தைகள் அடங்கிய குழுவுக்கோ நடத்தலாம் ( தடுப்பு நடவடிக்கைகள்).

**உளம்-செயல் சார்பு சிகிச்சைக்கு குழந்தையை எவ்வாறு கொண்டு வருவது?**
முதலில் ஆசிரியர் பெற்றோரோடு பேசி, அவர்கள் ஒப்புதல் பெற்று, சம்பந்தப்பட்ட உளம்-செயல் சார்பு சிகிச்சை மையத்துக்கு விளக்கங்களுக்கான பிரேரணை அனுப்புவார். அதன்மேல் குழந்தையின் பெற்றோர்களுக்கு இந்தச் சிகிச்சையளிப்பவரிடமிருந்து ஒரு விளக்கம் சம்பந்தமான சந்திப்புக்கு அழைப்பு வரும். அதன் பிறகு பள்ளியில் இன்னொரு சந்திப்பு நடக்கும். அதில் சிகிச்சையளிப்பவர் விளக்கங்களை விவரித்துவிட்டு சம்பந்தப்பட்ட குழந்தைக்கான **சிகிச்சை** மற்றும் அதன் **ஒருங்கிணைத்த மேம்பாடு** ஆகியவை சம்பந்தமாக ஒரு ஆலோசனை தருவார். சம்பந்தப்பட்ட குழந்தையின் பெற்றோர் மற்றும் பள்ளி நிர்வாகத்தின் ஒப்புதலோடு சிகிச்சையோ அல்லது குழந்தையின் மேம்பாட்டுக்கான முயற்சியோ - எது தேவையோ - மேற்கொள்ளப்படும். ஜூரிக் நகரத்தின் நிர்வாகம் இந்த உளம்-செயல் சார்பு சிகிச்சைக்கான நிதியுதவியை தான் அளிக்கும் சிறப்புக் கல்வி வாய்ப்பின் அங்கமாக பாவித்து அளிக்கிறது.

மேலதிகத் தகவல்களுக்கு கீழ்க்கண்ட முகவரியை அணுகவும்:
Fachstelle Psychomotorik-Therapie
Rämistrasse 39
8001 Zürich
தொலைபேசி எண்: 044 250 22 60
உரல்: www.stadt-zuerich.ch/psychomotorik-therapie